# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2224/9 - 2021 අප්‍රේල් මස 20 වැනි අඟහරුවාදා - 2021.04.20

*2224/9 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்***

*3(2) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(2) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இவ்வறிவித்தல் மூலம் :*

*(1) பொருளாதார மற்றும் சமூக நலன்களைக் கொண்டுவருவதற்கும் அத்துடன் நாட்டின் நிலத்தோற்றத்தை மாற்றுவதற்குமான சாத்தியத்தைக் கொண்டுள்ள தேசிய அக்கறைசார் கருத்திட்டமென்ற வகையில், வெளிநாட்டு/ உள்நாட்டு புடைவை உற்பத்தியாளர்களினால் செய்யப்பட்ட முதலீடுகளை வசதிப்படுத்துவதற்கென, மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூரிலுள்ள இலங்கை முதலீட்டுச் சபைக்குச் சொந்தமான 400 ஏக்கர்கள் வரையிலான இடப்பரப்பொன்றில் (இதனகத்துப் பின்னர் "வலயம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "தனிப்பயனுடைய புடைவை உற்பத்தி வலயம்" ஒன்றை அமைப்பதற்கான கருத்திட்டத்தை, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் நோக்கங்களுக்காக செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக அடையாளம் காண்கிறேன். தேவைப்படுகின்ற உட்கட்டமைப்பை வழங்குவதில் கைத்தொழில் அமைச்சினால் வசதிப்படுத்தப்பட்ட நடைமுறைப்படுத்தும் முகவராண்மையாக இலங்கை முதலீட்டுச் சபை காணப்படும்.*

*(2) திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(3) ஆம் பிரிவின் நியதிகளின்படி அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்ட திகதியிலிருந்து இருபத்துநான்கு (24) மாதங்களுக்குள், வலயத்தின் உட்கட்டமைப்புத் தேவைப்பாடு தயார்நிலையில் இருக்குமென மேலும் வெளிப் படுத்துகின்றேன்.*

(3) மேற்சொல்லப்பட்ட கருத்திட்டத்தின் நோக்கங்களுக்காக, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் நியதிகளின்படி இவ்வறிவித்தலுக்கான கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள முன்மொழியப்பட்ட விலக்களிப்புக்களானவை, இதன் அடையாளம் காணப்பட்டதும் வலயத்தினுள் தாபிக்கப்பட்டதுமான செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டத்தின் நோக்கெல்லைக்குள் வருவதாக முதலீட்டுச் சபையினால் இனங்காணப்பட்ட தனியாள் தொழில் முயற்சிகளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டுமென்பதுடன், அவை முதலீட்டின் அளவு, உற்பத்தி செய்யப்படவுள்ள தயாரிப்பின் வகை, சந்தை முகப்பாடு, உள்நாட்டுப் பெறுமதிச் சேர்க்கை முதலியன போன்ற அளவுகோள்களை அடிப்படையாகக் கொண்டுருவாக்கப்பட்ட முற்கூட்டி வரையறை செய்யப்பட்ட கட்டளைக்களுக்கிணங்க (இதனகத்துப் பின்னர் “தொழில் முயற்சி” எனக் குறிப்பீடு செய்யப்படும்) சொல்லப்பட்ட ஒவ்வொரு தொழில் முயற்சிக்குமான தனித்தேவைக்கேற்ப மாற்றியமைக்கப்பட்டவையாக இருக்குமெனக் குறித்துரைக்கிறேன். மேலுள்ள கட்டளைக் கற்களின் அடிப்படையில், அட்டவணையின் விடய இலக்கம் (1) முதல் (5) வரை குறிப்பீடு செய்யப்பட்ட ஊக்குவிப்புக்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஊக்குவிப்புக்களுக்குத் தனியாள் தொழில் முயற்சிகள் தகவுடையனவாதல் வேண்டும்.

(4) அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட ஊக்குவிப்புக்கள், செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(5) ஆம் பிரிவின் கீழ் இவ்வலயத்துக்கான பாராளுமன்ற அங்கீகாரம் பெறப்பட்ட திகதியிலிருந்து பயனுக்கு வரும் வகையில் ஒவ்வோர் ஐந்து (05) ஆண்டுகளிலும் மீளாய்வு செய்யப்பட்டு, 3(4) ஆம் பிரிவின் கீழான புதியதொரு வர்த்தமானி அறிவித்தலைத் தொடர்ந்து அமைச்சரவையின் அங்கீகாரத்துக்காக அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(5) இலங்கை முதலீட்டுச் சபைக்கும் தொழில் முயற்சிக்கும் இடையேயான தனியாள் உடன்படிக்கையில் (இதனகத்துப் பின்னர் “BOI உடன்படிக்கை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) விதிக்கப்படவுள்ள ஒவ்வொரு தொழில் முயற்சிக்குமான ஊக்குவிப்புக்களை முதலீட்டுச் சபை வழங்குதல் வேண்டும்.

**அட்டவணை**

(1) ***2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்***

(அ) **கூட்டிணை வருமான வரியிலிருந்தான (CIT) விலக்களிப்பு :**

தொழில் முயற்சியால் தோற்றுவிக்கப்பட்ட மொத்த வருமானத்துக்காக, பின்வரும் கூட்டிணை வருமான வரி விலக்களிப்புக்கள்/சலுகைகள் வழங்கப்படும் ;

| முதலீடு (ஐ. அ. டொ. மில்லியன்) | குறைந்தபட்ச தொழில் (எண்ணிக்கை) | ஆண்டுகளின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | வரி விடுமுறைக் காலம் | அப்போதைக்கு ஏற்றுமதியாளர் களுக்காக ஏற்புடைய தாகும் CIT இன் 50% |
| 10 ஐ விட பெரிய அல்லது சமமான மற்றும் 15 ஐ விடக் குறைவான (>=10 <15) | 150 | 5 | 2 |
| 15 ஐ விட பெரிய அல்லது சமமான மற்றும் 20 ஐ விடக் குறைவான (>=15 <20) | 200 | 7 | 2 |
| 20 ஐ விட பெரிய அல்லது சமமான மற்றும் 25 ஐ விடக் குறைவான (>=20 <25) | 300 | 8 | 3 |
| 25 ஐ விட பெரிய அல்லது சமமான மற்றும் 30 ஐ விடக் குறைவான (>=25 <30) | 350 | 9 | 4 |
| 30 ஐ விட பெரிய அல்லது சமமான (>=30) | 400 | 10 | 5 |

சொல்லப்பட்ட விலக்களிப்புக் காலப்பகுதியானது தொழில் முயற்சி எந்தத் திகதியில் முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையைச் செய்கிறதோ அந்தத் திகதியிலிருந்து ஒன்றரை ஆண்டுகளுக்குப் பின்னர் (18 மாதங்கள்) கணக்கிடப்படுதல் வேண்டும்.

மேற்சொல்லப்பட்ட வரி விடுமுறைக் காலமும் சலுகைக் காலப்பகுதியும் முடிவடைந்த பின்னர்,

(i) கருதப்பட்ட ஏற்றுமதிகள் உள்ளடங்கலான ஏற்றுமதிகள், அப்போதைக்கு ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்புடையற்பாலதாகவிருக்கும் சலுகை அடிப்படையிலான கூட்டிணை வருமான வரி (CIT) வீதம் ஏற்புடையதாதல் வேண்டும்.

(ii) உள்நாட்டுச் சந்தைக்கான வேறு விற்பனைகள் வாயிலான இறக்குமதிப் பிரதியீடு, அப்போதைக்கு உற்பத்தியாளர்களுக்கு ஏற்புடையற்பாலதாகவிருக்கும் கூட்டிணை வருமான வரி (CIT) வீதம் ஏற்புடையதாதல் வேண்டும்.

(ஆ) தொழிலின் மீதான வருமான வரி.- ஐந்து (05) ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதியொன்றுக்கு, வலயத்தில் காணப்படும் தொழில் முயற்சியிலுள்ள தொழிலிருந்தான ஈட்டுகைகள் மற்றும் இலாபங்களில் இருந்து எழுகின்ற வருமான வரியிலிருந்து கூடியபட்சம் தொழில் முயற்சியின் 10 வெளிநாட்டு ஊழியர்கள் என்னும் எண்ணிக்கையினர் வரை, விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) **2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டம் :**

2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர்பெறுமதி வரிச் சட்டத்தினதும் அதன் திருத்தங்களினதும் கீழான சேர்பெறுமதி வரிக் (VAT) கொடுப்பனவிலிருந்தும் விதிப்பனவிலிருந்தும் தொழில் முயற்சியானது பின்வருவனவற்றுக்காக விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(i) நிர்மாணம் தொடர்பான விடயங்கள் :

கருத்திட்ட நடைமுறைப்படுத்தற் காலப்பகுதியின்போது. பிணைக்கப்பட்ட பகுதிகளிலிருந்தான (சுங்கம் அல்லது BOI) கொள்வனவுகள் அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் நிறுவகிக்கப்படும் VAT நிருவாக முறைமையில் (உ-ம் : SVAT) பதிவுசெய்யப்பட்ட எவரேனும் பதிவுபெற்றுள்ள ஆளிடமிருந்து தொழில் முயற்சிக்கான வழங்கல் ஆகியன உள்ளடங்கலாக, எல்லா இறக்குமதிகளின் மீதும்.

(ii) கருதப்பட்ட ஏற்றுமதிகள் உள்ளடங்கலான ஏற்றுமதி மற்றும் உள்நாட்டுச் சந்தைக்கான விற்பனைகளுக்கூடான இறக்குமதிப் பிரதியீடு ஆகிய இரண்டுமான தயாரிப்புப் பயன்பாட்டுக்கான மூலதனப் பண்டங்கள் (தொழிற்கூடம், இயந்திரத்தொகுதி, உபகரணங்கள்)
கருத்திட்ட நடைமுறைப்படுத்தற் காலப்பகுதியின்போது, பிணைக்கப்பட்ட பகுதிகளிலிருந்தான (சுங்கம் அல்லது BOI) கொள்வனவுகள் மற்றும் ஆணையாளர் தலைமையதிபதியினால் நிறுவகிக்கப்படும் VAT நிருவாக முறைமையில் (உ-ம் : SVAT) பதிவுசெய்யப்பட்ட எவரேனும் பதிவுபெற்றுள்ள ஆளிடமிருந்து தொழில் முயற்சிக்கான வழங்கல் ஆகியன உள்ளடங்கலாக, எல்லா இறக்குமதிகளின் மீதும்.

(iii) கருதப்பட்ட ஏற்றுமதிகள் உள்ளடங்கலான ஏற்றுமதி மற்றும் உள்நாட்டுச் சந்தைக்கான விற்பனைகளுக்கூடான இறக்குமதிப் பிரதியீடு ஆகிய இரண்டுமான தயாரிப்புக்கான மூலப் பொருட்கள் மற்றும் தயாரிப்புடன்/ செயன்முறையுடன் தொடர்புடைய நுகர்வுப் பொருட்கள்.
கருத்திட்ட நடைமுறைப்படுத்தற் காலப்பகுதியின்போது, பிணைக்கப்பட்ட பகுதிகளிலிருந்தான (சுங்கம் அல்லது BOI) கொள்வனவுகள் மற்றும் ஆணையாளர் தலைமையதிபதியினால் நிறுவகிக்கப்படும் VAT நிருவாக முறைமையில் (உ-ம் : SVAT) பதிவுசெய்யப்பட்ட எவரேனும் பதிவுபெற்றுள்ள ஆளிடமிருந்து தொழில் முயற்சிக்கான வழங்கல் ஆகியன உள்ளடங்கலாக, எல்லா இறக்குமதிகளின் மீதும்.

இதற்கிணங்க, தொழில் முயற்சியினால் உள்நாட்டுச் சந்தைக்கு முடிவுற்ற பண்டங்களின் விற்பனைகளுக்கூடான இறக்கமதிப் பிரதியீட்டுக்காக VAT விதிக்கப்படுதலாகாது.

*(3)* ***2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்*** :

*2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தினதும் அதனது திருத்தங்களினதும் கீழான துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுக்* ("PAL") *கொடுப்பனவிலிருந்தும் விதிப்பனவிலிருந்தும் தொழில் முயற்சியானது ;*

(i) *கருத்திட்ட நடைமுறைப்படுத்தற் காலப்பகுதியின் போது, பிணைக்கப்பட்ட பகுதிகளிலிருந்தான (சுங்கம் அல்லது* BOI) *கொள்வனவுகள் உள்ளடங்கலாக, நிர்மாணம் தொடர்பான விடயங்களின் எல்லா இறக்குமதிகளின் மீதும்,*

(ii) *கருதப்பட்ட ஏற்றுமதிகள் உள்ளடங்கலான ஏற்றுமதி மற்றும் உள்நாட்டுச் சந்தைக்கான விற்பனைகளுக்கூடான இறக்குமதிப் பிரதியீடு ஆகிய இரண்டுக்குமான தயாரிப்புப் பயன்பாட்டுக்காக, பிணைக்கப்பட்ட பகுதிகளிலிருந்தான (சுங்கம் அல்லது* BOI) *கொள்வனவுகள் உள்ளடங்கலான மூலதனப் பண்டங்களின் (தொழிற்கூடம், இயந்திரத் தொகுதி, உபகரணங்கள்) எல்லா இறக்குமதிகளின் மீதும் ; மற்றும்*

(iii) *கருதப்பட்ட ஏற்றுமதிகள் உள்ளடங்கலான ஏற்றுமதி மற்றும் உள்நாட்டுச் சந்தைக்கான விற்பனைகளுக்கூடான இறக்குமதிப் பிரதியீடு ஆகிய இரண்டுக்குமான தயாரிப்புக்காக, பிணைக்கப்பட்ட பகுதிகளிலிருந்தான (சுங்கம் அல்லது* BOI) *கொள்வனவுகள் உள்ளடங்கலாக, மூலதனப் பொருட்கள் மற்றும் தயாரிப்புடன்/ செயன்முறையுடன் தொடர்புடைய நுகர்வுப் பொருட்கள் என்பவற்றின் எல்லா இறக்குமதிகளின் மீதும், விலக்களிக்கப்படுதல் வேண்டும்.*

*இதற்கிணங்க, தொழில் முயற்சியினால் உள்நாட்டுச் சந்தைக்கு முடிவுற்ற பண்டங்களின் விற்பனைகளுக்கூடான இறக்குமதிப் பிரதியீட்டுக்காக துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு விதிக்கப்படுதலாகாது.*

*(4)* ***(235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டம்*** :

*(235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான சுங்கத் தீர்வைக்* ("CID") *கொடுப்பனவிலிருந்தும் விதிப்பனவிலிருந்தும் தொழில் முயற்சியானது பின்வருவனவற்றிற்காக விலக்களிக்கப்படுதல் வேண்டும்.*

(i) *கருத்திட்ட நடைமுறைப்படுத்தற் காலப்பகுதியின் போது, பிணைக்கப்பட்ட பகுதிகளிலிருந்தான (சுங்கம் அல்லது* BOI) *கொள்வனவுகள் உள்ளடங்கலாக, நிர்மாணம் தொடர்பான விடயங்களின் எல்லா இறக்குமதிகளின் மீதும்,*

(ii) *கருதப்பட்ட ஏற்றுமதிகள் உள்ளடங்கலான ஏற்றுமதி மற்றும் உள்நாட்டுச் சந்தைக்கான விற்பனைகளுக்கூடான இறக்குமதிப் பிரதியீடு ஆகிய இரண்டுக்குமான தயாரிப்புப் பயன்பாட்டுக்காக, பிணைக்கப்பட்ட பகுதிகளிலிருந்தான (சுங்கம் அல்லது* BOI) *கொள்வனவுகள் உள்ளடங்கலான மூலதனப் பண்டங்களின் (தொழிற்கூடம், இயந்திரத் தொகுதி, உபகரணங்கள்) எல்லா இறக்குமதிகளின் மீதும்,*

(iii) *கருதப்பட்ட ஏற்றுமதிகள் உள்ளடங்கலான ஏற்றுமதி மற்றும் உள்நாட்டுச் சந்தைக்கான விற்பனைகளுக்கூடான இறக்குமதிப் பிரதியீடு ஆகிய இரண்டுக்குமான தயாரிப்புக்காக, பிணைக்கப்பட்ட பகுதிகளிலிருந்தான (சுங்கம் அல்லது* BOI) *கொள்வனவுகள் உள்ளடங்கலாக, மூலப் பொருட்கள் மற்றும் தயாரிப்புடன்/ செயன்முறையுடன் தொடர்புடைய நுகர்வுப் பொருட்கள் என்பவற்றின் எல்லா இறக்குமதிகளின் மீதும்,*

*ஆயினும், ஏற்பெதிர்ப் பொருட்பட்டியலிலுள்ள பொருட்கள் போதிய தரத்தில், அளவில் மற்றும் கருத்திட்டப் பூர்த்திக்கான காலவரையறைகளுக்கு இசைவாகக் கிடைக்கக்கூடியவையாக இல்லாதிருக்கின்றவிடத்து, அத்தகைய பொருட்களின் ஏதேனும் இறக்குமதி முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் சபையினால் கருத்திற்கொள்ளப்படுதல் வேண்டும்.*

*இதற்கிணங்க, தொழில் முயற்சியினால் உள்நாட்டுச் சந்தைக்கு முடிவுற்ற பண்டங்களின் விற்பனைகளுக்கூடான இறக்குமதிப் பிரதியீட்டுக்காக சுங்கத் தீர்வை* (CID) *விதிக்கப்படுதலாகாது.*

(5) **1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் :**

*1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தினதும் அதன் திருத்தங்களினதும் கீழான ஆயவரிக் (CESS) கொடுப்பனவிலிருந்தும் விதிப்பனவிலிருந்தும் தொழில் முயற்சியானது பின்வருவனவற்றிற்காக விலக்களிக்கப்படுதல் வேண்டும்.*

(i) *கருத்திட்ட நடைமுறைப்படுத்தற் காலப்பகுதியின் போது, பிணைக்கப்பட்ட பகுதிகளிலிருந்தான (சுங்கம் அல்லது BOI) கொள்வனவுகள் உள்ளடங்கலாக, நிர்மாணம் தொடர்பான விடயங்களின் எல்லா இறக்குமதிகளின் மீதும் ;*

(ii) *கருதப்பட்ட ஏற்றுமதிகள் உள்ளடங்கலான ஏற்றுமதி மற்றும் உள்நாட்டுச் சந்தைக்கான விற்பனைகளுக்கூடான இறக்குமதிப் பிரதியீடு ஆகிய இரண்டுக்குமான தயாரிப்புப் பயன்பாட்டுக்காக, பிணைக்கப்பட்ட பகுதிகளிலிருந்தான (சுங்கம் அல்லது BOI) கொள்வனவுகள் உள்ளடங்கலான மூலதனப் பண்டங்களின் (தொழிற்கூடம், இயந்திரத் தொகுதி, உபகரணங்கள்) எல்லா இறக்குமதிகளின் மீதும் ; மற்றும்*

(iii) *கருதப்பட்ட ஏற்றுமதிகள் உள்ளடங்கலான ஏற்றுமதி மற்றும் உள்நாட்டுச் சந்தைக்கான விற்பனைகளுக்கூடான இறக்குமதிப் பிரதியீடு ஆகிய இரண்டுக்குமான தயாரிப்புக்காக, பிணைக்கப்பட்ட பகுதிகளிலிருந்தான (சுங்கம் அல்லது BOI) கொள்வனவுகள் உள்ளடங்கலாக, மூலப் பொருட்கள் மற்றும் தயாரிப்புடன்/ செயன்முறையுடன் தொடர்புடைய நுகர்வுப் பொருட்கள் என்பவற்றின் எல்லா இறக்குமதிகளின் மீதும்.*

இதற்கிணங்க, தொழில் முயற்சியினால் உள்நாட்டுச் சந்தைக்கு முடிவுற்ற பண்டங்களின் விற்பனைகளுக்கூடான இறக்குமதிப் பிரதியீட்டுக்காக ஆயவரி (CESS) விதிக்கப்படுதலாகாது.

**மஹிந்த ராஜபக்ஷ, பா. உ.,**
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2021, ஏப்பிறல் 20.*

*05-09*